1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி முடிவு செய்யவில்லை.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து நாங்கள் அவர்களுக்கு வேலை அளிக்கிறோம், மான்யம் தாருங்கள் என்று அரசை யாராவது கேட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனத்திற்குப் பண உதவி செய்வதில்லை என்று என் பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு தனியாரும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று அரசு ஏதாவது அவர்களுக்கு உத்தர விட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர்.

வினா எண். 804—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருச்செந்தூர் தாலுகா, புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும்?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு?

திரு. மீ. வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) & (இ) ஆதலால் இக்கேள்விகள் எழ இடமில்லை.